# திமிகிட திமியென

ராகம்: வஸந்தா; தாளம்: ஆதி
இயற்றியவர்: தங்கம் பரமேஸ்வரன்

### பல்லவி

திமிகிட திமிகிட என தாண்டவம் செய்யும்
தில்லை ஆண்டவன் அடி பணி மனமே

### அனுபல்லவி

தீரா வினைகள் தீர்த்திடும் பரமன்
திவ்ய நாமமதை நினைத்திடு தினமே

### சரணம்

அம்பிகை சிவகாம ஸுந்தரி நாதன்
ஆல கால விஷம் அருந்தியவன்
மார்க பந்துவாம் மஹாதேவன்
மார்க்கண்டேயனை காத்தருளியவன்

ஆடலரசன் அம்பலவாணன்
அம்புலி அணிந்திடும் கங்காதர ஹரன்

©Copyright 2001-2015, Thangam Parameswaran, Orleans Ontario Canada